## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற் பொறுப்புமுயற்சிகளைப் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களாக மாற்றுதல் சட்டம்

---

*(1987 மே மாதம் 15 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

**1987, மே மாதம் 15 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 90 தபாற் செலவு : சதம் 75

# 1987 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற் பொறுப்புமுயற்சிகளைப் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களாக மாற்றுதல் சட்டம்

[1987 மே 15 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. —ஒ. 44/82
1690

**1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழிற் பொறுப்புமுயற்சிகள் (கொள்ளுதல்) சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற் பொறுப்புமுயற்சிகளைப் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களாக மாற்றுவதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற் பொறுப்புமுயற்சிகளைப் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களாக மாற்றுதற் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தொழிற் பொறுப்பு முயற்சிகளைக் கொண்டுநடாத்துவதற்குக் கூட்டுத்தாபனங்களைத் தாபித்தல்.

2. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழிற் பொறுப்புமுயற்சிகள் (கொள்ளுதல்) சட்டத்தின்கீழ் அரசாங்கத்தினால் கொள்ளப்பட்ட அல்லது அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழிற் பொறுப்புமுயற்சியைப் பொறுப்பேற்றுக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காகக் கூட்டுத்தாபனமொன்று தாபிக்கப்படுதல் அவசியமானதென அமைச்சரவை கருதுகின்றவிடத்து, அமைச்சரானவர் (இதனகத்துப்பின்னர் " கூட்டிணைத்தற் கட்டளை " எனக் குறிப்பீடு செய்யப்படும்) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம்—

(i) கூட்டிணைத்தற் கட்டளையானது எத்தொழிற் பொறுப்புமுயற்சி தொடர்பானதோ அத்தொழிற் பொறுப்புமுயற்சியைக் குறித்துரைக்கலாம் ;

(ii) அத்தகைய தொழிற் பொறுப்புமுயற்சியினைப் பொறுப்பேற்றுக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காகக் கூட்டுத்தாபனமொன்று தாபிக்கப்பட வேண்டுமென வெளிப்படுத்தலாம் ;

(iii) கூட்டுத்தாபனத்திற்கு ஒரு கூட்டிணைப்புப் பெயரைக் குறித்தொதுக்கலாம் ;

(iv) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைக் குறித்துரைக்கலாம் ;

(v) கூட்டுத்தாபனத்தின் பிரதான தொழிலிடத்தினைக் குறிப்பிடலாம் ;

(vi) தொழிற் பொறுப்புமுயற்சியின் சொத்துக்களைக் கருத்திற் கொண்டு கூட்டுத்தாபனத்தினது ஆரம்ப மூலதனத்தையும் அத்தகைய மூலதனம் பல்வேறு வகுப்பினவான பங்குகளாகப் பிரிக்கப்படுவதனையும் குறித்துரைக்கலாம் ;

(vii) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினது உறுப்பினர்களின் எண்ணிக்கையினை நிர்ணயிக்கலாம் ; அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையானது ஐந்திற்கு மேற்படாமலும் மூன்றிற்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும் ;

2—சீ 092342—2,850 (86/08)

(viii) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, பணிப்பாளர் சபையினது முதலாவது உறுப்பினர்களை நியமிக்கலாம்;

(ix) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, பணிப்பாளர் சபையினது முதலாவது தவிசாளரை நியமிக்கலாம்;

(x) பணிப்பாளர் சபையினது கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண்ணைக் குறித்துரைக்கலாம்.

(2) கசெற்றில் கூட்டிணைத்தற் கட்டளை வெளியிடப்பட்டதன்மேல், அப்போதைக்கு அதன் உறுப்பினர்களாகவுள்ள ஆட்களையும் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள கூட்டிணைப்புப் பெயரையும் இடையறு வழியுரிமையையும் கொண்டுள்ள (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) கூட்டுத்தாபனமொன்று தாபிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) கூட்டிணைத்தற் கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப மூலதனமானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான கலந்தாலோசனையுடனும் கசெற்றில் கூட்டிணைத்தற் கட்டளை வெளியிடப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று கூட்டுத்தாபனத்தினது சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதியைக் கருத்திற்கொண்டும், அமைச்சரினால் நிர்ணயிக்கப்படுதல்வேண்டும்.

(4) கூட்டுத்தாபனமானது அதன் கூட்டிணைப்புப் பெயரில் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

**தொழிற் பொறுப்பு முயற்சிகளைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கல்.**

3. (1) கசெற்றில் கூட்டிணைத்தற் கட்டளையானது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து (இது இப்பிரிவில் "இயைபான தேதி" எனக் குறிப்பிடு செய்யப்படும்) கூட்டிணைத்தற் கட்டளை எத்தொழிற் பொறுப்புமுயற்சி தொடர்பானதோ, அத்தொழிற் பொறுப்புமுயற்சியானது, அக்கூட்டிணைத்தற் கட்டளைமூலம் தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்திற்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "தொழிற் பொறுப்புமுயற்சி" என்பது—

(அ) இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளன்று அரசுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளனவும் அப்பொறுப்புமுயற்சியின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டனவுமான அசைவுள்ள அல்லது அசைவற்ற எல்லா ஆதனங்களும்;

(ஆ) அத்தகைய ஆதனத்தில் அல்லது தொழிலில் அல்லது அத்தகைய ஆதனத்திலிருந்து அல்லது தொழிலிலிருந்து எழும் எல்லா உரிமைகளும், தத்துவங்களும், சிறப்புரிமைகளும், அக்கறைகளும் அத்துடன் அப்பொறுப்புமுயற்சிக்குள்ள எல்லாப் பொறுப்புக்களும்;

(இ) தொழிற் பொறுப்புமுயற்சியுடன் தொடர்புபட்ட அல்லது சம்பந்தப்பட்ட எல்லாப் புத்தகங்களும் கணக்குகளும் ஆவணங்களும் அல்லது அப்பொறுப்புமுயற்சியின் ஏதேனும் ஆதனமும்,

எனப் பொருள்படும்.

(2) ஓராம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி—

(அ) இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளன்று அரசுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளனவும், கூட்டிணைத்தற் கட்டளை தொடர்புறுத்தும் பொறுப்புமுயற்சியின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டனவுமான அசைவுள்ள அல்லது அசைவற்ற எல்லா ஆதனங்களும் இயைபான தேதியிலிருந்து கூட்டிணைத்தற் கட்டளையினால் தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாதல் வேண்டும் ;

(ஆ) இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளன்று அத்தொழிற் பொறுப்புமுயற்சிக்குள்ள எல்லாப் பொறுப்புக்களும் இயைபான தேதியிலிருந்து அக்கூட்டுத்தாபனத்துக்குள்ள பொறுப்புக்களாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளன்று கூட்டுத்தாபனத்தில் ஊழியம் வழங்கப்படாத அல்லது அத்தகைய ஊழிய வாய்ப்பினை ஏற்றுக்கொள்ளாத அத்தொழிற் பொறுப்புமுயற்சியிலுள்ள எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நட்டஈட்டுக் கொடுப்பனவுக்கும் பணிக்கொடைக் கொடுப்பனவுக்கும் உரித்துடையவர்களாதல் வேண்டும் ;

(ஈ) அப்பொறுப்புமுயற்சியின் நோக்கங்களுக்காகச் செய்துகொள்ளப்பட்டவையும், இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளவையுமான, எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் இயைபான தேதியிலிருந்து அக்கூட்டுத்தாபனத்தினால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(உ) அத்தகைய தொழிற் பொறுப்புமுயற்சியினால் அல்லது அதற்கு எதிராக அல்லது அத்தகைய தொழிற் பொறுப்புமுயற்சியினைப் பிரதிநிதித்துவஞ் செய்பவர் என்ற தன்மையில் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது அவருக்கெதிராகத் தொடுக்கப்பட்டு இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறுதிருக்கும் எல்லாக் குற்றவழக்குகளும் சட்ட நடவடிக்கைகளும் இயைபான தேதியிலிருந்து அக்கூட்டுத்தாபனத்தினால் அல்லது அக்கூட்டுத்தாபனத்திற்கெதிராகத் தொடுக்கப்பட்ட குற்றவழக்குகளாகவும் சட்ட நடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து வலுவுக்கிடவும் படலாம்.

பணிப்பாளர் சபை.

4. (1) அமைச்சர், (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பிடு செய்யப்படும்) கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களை நியமித்தல் வேண்டும் என்பதுடன், அவ்வுறுப்பினர்களில் ஒருவரைச் சபையின் தவிசாளராக நியமித்தலும் வேண்டும்.

(2) சபையின் உறுப்பினர்களில் ஒருவர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவராதல் வேண்டும்.

(3) சபையின் உறுப்பினரொருவர் முன்னரே தம் பதவியை வறிதாக்கினாலொழிய, மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) சபையின் உறுப்பினரெவரையும் அகற்றுதல் உசிதமானதென அமைச்சர் கருதினால், எவ்விதக் காரணமும் காட்டாது வர்த்தமானியில் வெளியிடப்படும் ஒரு கட்டளையின்மூலம் சபையின் எவரேனும் உறுப்பினரை அவர் அகற்றலாம் :

ஆயின், எவ்வாறாயினும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரெவரையும், அத்தகைய அமைச்சரின் ஒருப்பாட்டுடன் தவிர, அகற்றுதலாகாது.

(5) உறுப்பினரொருவர் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான கடிதத்தின் மூலம் தனது பதவியைத் துறக்கலாம்.

(6) இறத்தல், பதவிதுறத்தல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக உறுப்பினரொருவர் பதவியை வறிதாக்கும் சந்தர்ப்பத்தில், அமைச்சர் அவரது இடத்தில் வேறொராளை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் எவ்வுறுப்பினரின் பின் பதவி வகிக்கின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(7) சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக உறுப்பினரொருவர் அவரது கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருக்குமிடத்து, அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கு வேறோர் ஆளை அமைச்சர் நியமிக்கலாம்.

(8) சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய நியதிகளினதும் நிபந்தனைகளினதும் மீது ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.

(9) தவிசாளரானவர், சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் தனது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதிருப்பின், அமைச்சர், சபையின் உறுப்பினரொருவரைத் தவிசாளராகச் செயலாற்றுவதற்கு நியமிக்கலாம்.

(10) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டிணைத்தற் கட்டளைக்கும் அமைவாகச் சபை அதன் கூட்டங்களை நடாத்துதலையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலையும் ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை ஆக்கலாம்.

(11) கூட்டுத்தாபனம் கொடுக்க அல்லது செய்துகொள்ள உத்தேசிக்கும் ஏதேனும் கடனில் அல்லது ஒப்பந்தத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறையுள்ள உறுப்பினரொருவர் சபையின் கூட்டமொன்றில் தனது அக்கறையின் தன்மையை வெளிவிடுதல் வேண்டும். வெளிவிடுகையானது அத்தகைய கூட்ட நடவடிக்கைக் குறிப்பில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுப்பினர் அத்தகைய கடன் அல்லது ஒப்பந்தம் தொடர்பில் அத்தகைய சபையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் பங்குபற்றுதலுமாகாது.

(12) சபையின் செயல் அல்லது முடிபு எதுவும், அதன் உறுப்பினர்களிடையே இருக்கும் வெற்றிடமொன்று காரணமாக அல்லது எவரேனும் உறுப்பினரின் நியமனத்திலுள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

5. (1) சபையின் கட்டுக்காப்பிலிருக்கவேண்டிய ஒரு பொது இலச்சினையைக் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினை சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் பொறிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையில் அல்லாது ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது ; அவர்கள் இருவரும் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) சபையானது கூட்டுத்தாபனத்தின் இலச்சினை பொறிக்கப்பட்ட சாதனங்கள் அல்லது ஆவணங்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

அமைச்சரின் பணிப்புரைகள்.

6. அமைச்சர், காலத்திற்குக் காலம், சபையின் கலந்தாலோசனையுடன் சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் கடமைகளைப் புரிவதற்குமான பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளைச் சபைக்கு வழங்கலாமென்பதுடன், அத்தகைய பணிப்புரைகள் சபையினால் நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

சபையின் தத்துவங்களும் பணிகளும்.

7. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களினதும் தொழிலினதும் பொதுக் கண்காணிப்பு, பணிப்பு, கட்டுப்பாடு என்பன சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) சபை இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களிலும் கடமைகளிலும் பணிகளிலும் எதனையும் கூட்டுத்தாபனத்தின் தவிசாளருக்குக் கையளிக்கலாம்.

(3) சபை, அதன் கூட்டிணைத்தற் கட்டளையில் தரப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உகந்ததான எதனையும் செய்வதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், இந்நோக்கத்திற்காக—

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளலாம், அத்துடன் வைத்திருக்கலாம் அல்லது வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுக்கலாம் என்பதுடன், ஏதேனும் அத்தகைய ஆதனத்தை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடலாம் அல்லது விற்கலாம் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்பட்ட அசைவற்ற ஆதனம் எதுவும் அமைச்சரின் முன்னங்கீகாரமின்றி விற்கப்படுதலாகாது ;

(ஆ) காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளலாம் ;

(இ) அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகப் பணத்தைக் கடனாகப் பெறலாம் என்பதுடன், அதன் எவையேனும் சொத்துக்களை ஈடுவைப்பதன்மூலம் ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவை நிச்சயப்படுத்தலாம் ;

(ஈ) அதன் குறிக்கோள்களையும், பணிகளையும் நிறைவேற்றுவதற்கு அவசியமாகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் வேறு ஊழியர்களையும் நியமிக்கலாம் ;

(உ) அதன் கடமைகளைப் புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்து நிறைவேற்றலாம் ;

(ஊ) அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதன், புரிவதன் அல்லது நிறைவேற்றுவதன் இடைநேர்விளைவான அல்லது விளைவாந்தன்மையினவான அல்லது அது தொடர்பான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்யலாம்.

கூட்டுத்தாபனத்தின் மூலதனம்.

8. கூட்டுத்தாபனத்தின் மூலதனம் கூட்டிணைத்தற் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையாதல் வேண்டும் என்பதுடன், பாராளுமன்றத்தின் தீர்மானத்தின்மூலம் காலத்திற்குக்காலம் அதிகரிக்கவும்படலாம்.

கூட்டுத்தாபனத்துக்குள்ள பொறுப்பு.

9. கூட்டுத்தாபனத்துக்குள்ள பொறுப்பானது கூட்டுத்தாபனத்தினது மூலதனத் தொகைக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தில் அரசாங்கம் பங்குகளை வைத்திருத்தல்.

10. சபையானது, மூலதனத்தின் பெறுமதிக்குச் சமமான முழுமையாகக் கொடுக்கப்பட்ட பங்குகளைத் திறைசேரிச் செயலாளருக்கு (அவரது பதவி முறையில்) குறித்தொதுக்குதல் வேண்டும் ; அவர் அத்தகைய பங்குகளை அரசுக்காகவும் அரசின் சார்பாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

11. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கட்டுப்பாட்டுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்ினது ஏற்பாடுகளின் ஏற்புடைமை.

12. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டும் கணக்காய்வும்.

(2) கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தின் வரவு, செலவு, சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றைய எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பனபற்றிய தகுந்த கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனக் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான, அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், கூட்டுத்தாபனக் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

13. இருபது இலட்சம் ரூபாவுக்குக் குறையாத கணக்குகள் தொடர்பிலான நிதித் தன்மையினதான முடிபு எதுவும் பிரதான நிதி முகாமையாளரானவர், அத்தகைய செலவினத்தின் நிதிசார் சிக்கல்கள் எல்லாவற்றையும் சுட்டிக்காட்டுகின்ற நிதிசார் பகுப்பாய்வு ஒன்றைச் சமர்ப்பித்தாலன்றி, சபையால் எடுக்கப்படுதலாகாது.

பிரதான நிதி முகாமையாளர் நிதிசார் பகுப்பாய்வொன்றைச் சமர்ப்பித்தல்.

14. (1) சபையானது, அதன் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பனவற்றைத் திறமையாகப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமானவையெனக் கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் முகவர்களையும் நியமிக்கலாம்.

அலுவலர்கள், சேவையாளர்கள், முகவர்கள் ஆகியோரின் நியமனம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் முகவர்களுக்கும் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும், அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர்கள் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தவர்களாதலும் வேண்டும்.

(3) சபையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அந்த அலுவலரினதும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்தோடு, அதேபோன்ற சம்மதத்தோடு சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குக் கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலும்.

(4) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கப் போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கப் போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு அரசாங்கத்திற்குச் சேவைபுரிவதாக உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ள எவரேனும் ஆளைக் கூட்டுத்தாபனமானது வேலைக்கமர்த்துமிடத்து, அந்த ஆளினால் கூட்டுத்தாபனத்துக்கு ஆற்றப்படும் சேவைக் காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தத்தின் கட்டப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

அசைவுள்ளதும் அசைவற்றதுமான அரச ஆதனம் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கக் தக்கதாகச் செய்யப்படுதல் வேண்டும்.

15. (1) ஏதேனும் அசைவற்ற அரச ஆதனம் கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காகத் தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கமானது, முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ், அத்தகைய ஆதனத்தின் விசேட மானியக்கொடை அல்லது குத்தகை கொடுக்கப்படக்கூடியதொரு நோக்கமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்திற்குச் செய்யப்பட்ட அத்தகைய ஆதனத்தின் விசேட மானியக்கொடைக்கு அல்லது குத்தகைக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) ஏதேனும் அசைவுள்ள அரச ஆதனம் கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காகத் தேவைப்படுமிடத்து, அமைச்சரானவர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் கூட்டுத்தாபனத்திற்குக் கைமாற்றி அதற்கு உரித்தாக்கலாம்.

கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள் என்போர் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

16. கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

17. கூட்டுத்தாபனத்திற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரின் உடலுக்கெதிராகவோ அல்லது அவரது ஆதனத்துக்கெதிராகவோ எழுத்தாணை எதுவும் வழங்கப்படலாகாது.

கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவரின் உடலுக்கெதிராக அல்லது ஆதனத்துக்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படலாகாது.

18. கூட்டுத்தாபனமானது, இலஞ்சச் சட்டத்தின் கருந்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் கூட்டுத்தாபனமானது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.